# ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி

(தேசிய தர மதிப்பீட்டுக் கழக மதிப்பீட்டில் "A" கிரேடு (மூன்றாம் சுற்று) அந்தஸ்து பெற்றது.

ISO- 9001:2015 தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்

திருச்சிராப்பள்ளி-620002.


## பாடக் கையேடு

## I B.A LITERATURE – I Semester

# நன்னூல் எழுத்ததிகாரம்

**Sub Code :22ACCBL2**

**ஒரு மதிப்பெண் வினாக்கள். :**

1. பாயிரம் இடம்பெறும் நூற்பாக்கள் - **55**
2. பாயிரம் என்ற சொல்லின் பொருள் - **பரந்துபட்டது**
3. நூலின் வரலாற்றை விளங்க உரைப்பது – **பாயிரம்**
4. இன்றியமையாத கருதி நூலின் முகப்பில் கூறுவது – **முகவுரை /நூல் முகம்**
5. ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புகளையும் தொகுத்துக் கூறுவது - **பதிகம்**
6. நூலின் பெருமையை அழகுப்படுத்திக் கூறுவது- **அணிந்துரை**
7. நூலில் கூறப்படாத பொருளை புறத்தே கூறுவது- **புறவுரை**
8. நூலில் கூறப்படாத பொருளை புறத்தே கூறுவது-**புறவுரை**
9. நூலில் கூறாதவற்றைபிறர் தந்து உரைப்பது- **தந்துரை**
10. பாயிரம் எத்தனை வகைப்படும் ? **இரண்டு**
11. பாயிரம் - **பொது சிறப்பு என இருபாற்றே**
12. பொது பாயிரத்தின் கூறுகள் எத்தனை? - **ஐந்து**
13. நூல் எத்தனை வகைப்படும் ? **மூன்று**
14. **முதல் வழி சார்பு** என நூல் 3 ஆகும்
15. வினை இன்றி நீங்கி விளங்கிய அறிவினையுடைய கடவுள் ஆதி காலத்தில் செய்தது? - **முதல் நூல்**
16. முன்னோர் நூலின் முடிவு ஒத்து பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி அழியா மரபினது - **வழி நூலாகும்** .
17. நூலின் பயன் எத்தனை? - **4.**
18. மதம் என்ற சொல்லின் பொருள்- **கொள்கை அல்லது கோட்பாடு**
19. நூலில் இடம்பெறக் கூடாத குற்றங்கள் - **10**
20. நூலில் இன்றியமையாது பொருந்த வேண்டிய அழகு - **பத்து**
21. ஒரு கருத்தை வெளிப்படுத்த நூலாசிரியர் அறிவு நுட்பத்தால் கடைபிடிக்கும் முறை - **உத்தி**
22. 'யுக்தி 'என்பது எம்மொழிச் சொல்- **வடமொழி** .
23. நன்னூல் நுதலி புகுதல் முதலாக உயிர்த்து உணர வைப்பது ஈராக அமைந்த உத்திகள் எத்தனை? **32**
24. நூலின் உறுப்புகள்- **2**
25. தற்கால இலக்கண விதிகளை- **சூத்திரங்கள்**
26. சூத்திரம் தமிழில் எவ்வாறு வழங்கப்படுகிறது- **நூற்பா**
27. இலக்கண நூலுக்கு உரை எவ்வளவு என வரையறுத்துக் கூறுவது - **காண்டிகை உரை** .

28. ஒரு பொருளை விளங்க வேண்டிய இடத்தில் சுருங்கிக் கூறுவது- **குன்றக்கூறல்**
29. நூலின் இலக்கணம் எத்தனை வேறுபட்ட தடைகளை பெற்று வருதல் வேண்டும்? **13**
30. பவணந்தி முனிவர் எக்காலத்தவர் அறிமுகப்படுத்துகிறார்- **12ம் நூற்றாண்டுக்கு பிற்பகுதி**
31. நன்னூலை இயற்றியவர் யார்?- **பவணந்தி முனிவர்**
32. அமர பரணன் என்னும் சிறப்புப் பெயர் உடையவர்- **சீய கங்கன்**
33. சூத்திரங்கள் வகை எத்தனை ? -**ஆறு**
34. சூத்திரத்தின் நிலை எத்தனை? - **நான்கு**
35. சூத்திரத்தின் வேறு பெயர்கள்- **பிண்டம், தொகை, வகை**.
36. உரை எத்தனை வகைப்படும்? - **இரண்டு**
37. கடை மாணாக்கர்? - **மண், கிளி போன்றவர்கள்**
38. முதல் மாணாக்கர் - **அன்னம், பசு போன்றவர்கள்**
39. நூல் யாப்பு- **நான்கு** வகைப்படும்.
40. மெய் மயக்கம் **இரண்டு** வகைப்படும்
41. வேற்றுமை உருபுகள் எத்தனை - **8**
42. அ, இ , உ என்பவை - **சுட்டெழுத்துகள் .**
43. மதம் எத்தனை வகைப்படும். – **7 .**
44. நல்லாசிரியரின் இலக்கணமாக சுட்டப்படுவது எது? **பூமி, மலை, துலாக்கோல், மலர்**
45. ஆசிரியராகாதார் இலக்கணம் - **கழல் பெய்த குடம், மடல்களையுடைய பனைமரம், பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு**.
46. நன்னூல் எந்த நூலை முதல் நூலாக கொண்ட வழி நூல்?**தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலையும் தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் உரையையும் முதல்நூலாகக் கொண்ட வழிநூல்**
47. இலக்கணம் எத்தனை வகைப்படும்? **ஐந்து வகைப்படும்**
48. சிறப்பு பாயிரத்தை இயற்றியவர் யார்? **பவணந்தி முனிவர்**

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்.**

1. **பாயிரத்தின் பெயர்களைக் கூறுக?**முகவுரை 2) பதிகம் 3) அணிந்துரை 4) நூல் முகம் 5) புறவுரை 6) தந்துரை 7) புனைந்துரை ஆகிய ஏழும் பாயிரத்தின் பெயர்கள் ஆகும்.
2. **நூன் முகம், புனைந்துரை பெயர்க்காரணம் தருக?**
நூன் முகம்-நூலுக்கு முகம் போல அமைவதால் நூன்முகம் எனப்பட்டது.புனைந்துரை- இது ஒரு நூலில் உள்ள சிறப்பானச் செய்திகளை எடுத்துரைப்பது புனைந்துரை ஆகும்.
3. **பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
பாயிரம்- பாயிரம் என்பது ஒரு நூலின் வரலாறு ஆகும்.
வகை- பாயிரம் இரண்டு வகைப்படும் .
அவை1) பொதுப் பாயிரம் 2) சிறப்புப் பாயிரம்

**4. பொதுப்பாயிரத்தின் இயல்பு யாது?**

நூல், நுவல்வோன், நுவலுந்திறன், கொல்வோன் ,கோடல் கூற்று ஆகியனகூறுதல்.

**5. நூல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

3 வகைப்படும். 1.முதல் நூல் 2. வழிநூல் 3.சார்பு நூல்

**6. முதல்நூல் என்றால் என்ன?**

வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல்நூல்.

**7. வழிநூல் என்றால் என்ன? சான்று தருக.**

முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்து பின்னோன் வேண்டும் விகற்ப அழியா மரபினது வழிநூல்.

**சான்று நன்னூல்**

**8. சார்பு நூல் என்றால் என்ன?**

**இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித் திரிபு வேறுடையது சார்பு நூல்**

**9. மதம் எத்தனை வகைப்படும்?**

**7 வகைப்படும்.**

**10. குற்றம் எத்தனை வகைப்படும்?**

**10 வகைப்படும்.**

**11. அழகு எத்தனை வகைப்படும்?**

**10 வகைப்படும்.**

**12. உத்தி எத்தனை வகைப்படும்!**

**32 வகைப்படும்.**

**13. உத்தி என்றால் என்ன?**

i) ஒரு நூலால் உணர்த்தப்படும் பொருளை, நூல் வழக்கோடும் உலக வழக்கோடும் பொருந்துமாறு காண்பித்து ஏற்குமிடத்தை அறிந்து இவ்விடத்தில் இவ்வாறு சொல்லுதல் பொருந்தும் என நினைத்து தக்க படியாகச் செலுத்துதல் தந்திரவுத்தி ஆகும்.

ii) நூற் பொருத்தத்தை கூறுவது உத்தி எனப்படும்.

**14. ஒத்து என்றால் என்ன?**

i) ஒரு சாதியாயுள்ள மணிகளை வரிசையாகப் பதித்து வைத்தாற் போல, ஓரினமாயுள்ள பொருள்களை ஒரு வழிப்படச் சொல்லுவது ஒத்து எனப்படும்.

ii) ஒத்து என்றால் இயல் என்றும் பொருள் உண்டு.

**15. படலம் என்றால் என்ன?**

ஒரு வழிப்படாமல் பல்வேறுபட்ட பொருள்களினால் பொது வகையாகக் கூறினால், அது படலம் என்னும் உறுப்பு ஆகும்.

**16. சூத்திரம் என்றால் என்ன?**

சிலவகை எழுத்தில் பல்வகைப் பொருளைச் செவ்வன் ஆடியில் செறித்தியிது விளக்கித் திட்பம் நுட்பம் சிறந்தன சூத்திரம்.

**17. சூத்திர நிலையின் வகைகளைக் கூறு.**

i) சில வகை எழுத்துக்களால் ஆகிய வாக்கியத்தில் பலவகைப்பட்ட விரிந்த பொருள்களை செவ்வையாக அடக்கி அப்பொருளை விளங்கச் செய்வது சூத்திரம் ஆகும்.

ii) குற்றமில்லாமையும், சொல்வலிமையும் பொருள் வலிமையும் ஆழமுடைமையால் பொருள் நுணுக்கங்களும் சிறந்து வருவன சூத்திரம் ஆகும்.

**18. சூத்திரங்களுக்கான வேறுபெயர்களைக் குறிப்பிடு.**

பிண்டம் தொகை, வகை, குறி, செய்கை, கொண்டியல் புறனடை.

**19. உரையின் இலக்கணம் யாது?**

பாடம்,கருத்து, சொல்வகை, சொற்பொருள். தொகுத்துரை, உதாரணம், வினாவிடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரிய வசனம் என உரை 14 வகைப்படும்.

**20. உரை எத்தனை வகைப்படும்?**

2 வகைப்படும். 1. விருத்தியுரை 2.காண்டிகையுரை

**21. காண்டிகையுரை என்றால் என்ன?**

கருத்துப் பதப்பொருள். காட்டு மூன்றினும் அவற்றொடு வினா விடை ஆக்கலானும் சூத்திரத்துட் பொருள் தோற்றுவ காண்டிகை.

**22. விருத்தியுரை என்றால் என்ன?**

சூத்திரத்து உள்பொருள் அன்றியும் ஆண்டைக்கு இன்றியமையா யாவையும் விளக்கத் தன்னுரையானும் பிறநூலானும் ஐய அகல ஐங் காண்டிகை உறுப்பொடு மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி

**23 .நூல் என்பதற்கான பெயர்க்காரணத்தைக் கூறு.**

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச் செஞ்சொல் புலவனே சேயிழையின் எஞ்சாத கையே வாயாக கதிரே மதியாக மையிலா நூல் முடியும்.

**24. நிலத்தின் இயல்பு யாது?**

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும் பருவ முயற்சி அளவில் பயத்தலும் மருவிய நன்னில மாண்பாகும்.

**25. மலை எங்ஙனம் ஆசிரியருக்கு ஒப்பாகிறது?**

அளக்கலாகா அளவும் பொருளும்

துளக்கலாகா நிலையும் தோற்றமும்

வறப்பிறும் வாந்தரும் மலை.

**26. நிறைகோவின் இயல்பு பாது?**

ஐயந்தீரப் பொருளை உணர்த்தலும் பெய்ந்நடுநிலையும் மிகுந்தது நிறைகோல்.

**27. மலர் எங்ஙனம் ஆசிரியருக்கு ஒப்பாகிறது?**

மங்கலமாகி இன்றியமையாது யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப் பொழுதின் முகமலர்வுடையது பூ.

**28. கழற்பெய் குடத்தின் இயல்பு யாது?**

பெய்த முறையின்றிப் பிறழ உடன்தரும் செய்தி கழற்பெய் இடத்தின் இயல்பு.

**29.நூல் என்பதற்கான பெயர்க்காரணத்தைக் கூறு.**

பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச் செஞ்சொல் புலவனே சேயிழையின் எஞ்சாத கையே வாயாக கதிரே மதியாக மையிலா நூல் முடியும்.

**30. நிலத்தின் இயல்பு யாது?**

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும் பருவ முயற்சி அளவில் பயத்தலும் மருவிய நன்னில மாண்பாகும்.

**31. மடற்பனை ஆசிரியராகாதவருக்கு எங்ஙனம் ஒப்பாகிறது?**

தானே தரக்கொளின் அன்றித் தன்பால் மேவிக் கொளக் கொடாவிடத்தது மடற்பனை.

**32. பருத்திக் குண்டிகையின் இயல்பு யாது?**

அரிதில் பெயக்கொண்டு அப்பொருள் தான் பிறர்க்கு எளிதில் ஈவில்லது பருத்திக் குண்டிகை.

**33. முதல் நூலின் இலக்கணம் யாது?**

தெய்வத்தால் எழுதப்படுகின்ற நூலையே முதல் நூல் என்க. ஆனால் இறைவனுடைய அருளைப் பெற்றவர்கள் எழுதப்படுகின்ற நூல்கள் அனைத்துமே முதல் நூல் ஆகும்.

**(உ.ம்) அகத்தியம்**

**34.சார்பு நூலின் இலக்கணம் யாது?**

முதல் நூல் மற்றும் வழி நூல் முதலானவை இருவகை நூல்களுக்கும் பொருள் முடிவால் ஓரளவு ஒத்தும் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இயற்றப்படுவதம் சார்பு நூல் ஆகும்.(உ.ம்) நன்னூல்

**35. பொன்னைப் போல் போற்றுவோம் எதனை?**

தனக்கு முன்னால் இருந்த ஆசிரியர்கள் இயற்றிய நூலின் பொருளை மட்டுமின்றி அவர்கள் இலக்கணத்தில் பயன்படுத்திய சூத்திரங்களின் சில வரிகளையும் பொன்னைப்போல காப்பாற்றுவோம் என்பதற்கு அடையாளமாக தமது நூலில்

ஆங்காங்கே பயன்படுத்தி செல்வது வழிநூல், சார்பு நூலுக்குரிய அடையாளங்கள் ஆகும்.

**36. நூற்பயன் யாவை?**

ஒரு நூல் படிக்கப்படுபவரின் நலனுக்காகவும் சமுதாயத்தில் நல்விளைவுகளை ஏற்படுத்துவதற்காகவும் எழுதப்பட வேண்டும். ஒரு நூலானது நான்கு வகை பயன்களைக் கொண்டிருக்கும்.

அவை,1) அறம் 2) பொருள் 3) இன்பம் 4) வீடு ஆகியவை.

**37. கழற்குடம், பருத்தி குண்டிகை யாருக்கு உவமை?**

பருத்தி - கழற்குடம், பருத்தி குண்டிகை ஆகியவை இரண்டும் ஆசிரியர் ஆகாதவருக்கு உவமை ஆகும்.

**38. நெய்யறி, எருமை யாருக்கு உவமை?**

நெய்யறி, எருமை ஆகியவை 'கடை' மாணாக்கருக்கு உவமை ஆகும்.

**39. முறையின் வைப்பே, உலக மலையாமே-பொருள் தருக?**

முறையின் வைப்பே - படலம், ஓத்து முதலியவற்றை ஏற்ற முறைப்படி வைத்தல்.

உலகமலை யாமே= உயர்ந்தோர் கருத்து மாறுபடாமல் இருக்க வேண்டும்.

**40 . இரட்டுற மொழிதல், ஏதுவின் முடித்தல் பெயர்க்காரணம் தருக?**

இரட்டுற மொழிதல்- ஒரு வாக்கியத்தை இரண்டு பொருள்படக் கூறுதல் இரட்டுற மொழிதல் ஆகும்.

ஏதுவின் முடித்தல்- முன்பு காரணம் விளங்காமல் கூறப்பட்ட ஒன்றை பின் காரணம் காட்டி முடிவு செய்தல்.

**41.அரிமா நோக்கம், ஆற்றொழுக்கு – விளக்குக?**

i)அரிமா நோக்கம்- முன்னும், பின்னும் பார்க்கின்ற சிங்கத்தின் பார்வையைப் போன்றது சூத்திர நிலை.

ii) ஆற்றொழுக்கு- சூத்திரங்கள் ஒன்றோடு ஒன்று பொருளால் தொடர்ந்து நிற்கும் நிலைகள், இடையறாது ஒருமுகமாக ஓடுகிற் ஆற்று நீரோட்டத்தையும் போன்றது சூத்திரநிலை.

**42. ஐங்காண்டிகையுரை என்றால் என்ன?**

கருத்துரை, பதவுரை, எடுத்துக்காட்டு ஆகிய மூன்றுடன் வினா, விடை ஆகியவற்றையும் சேர்த்துக் கூறுவது ஐங்காண்டிகையுரை எனப்படும்.

**ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. நூலின் வகைகளைக் கூறி விளக்குக ?

   நூற்பா4-10

2. பாடம் சொல்லும் வரலாற்றை எழுதுக?

   நூற்பா 36

3. நூலின் மாண்பு பற்றி விளக்குக.

   நூற்பா-25

4. நூலின் பெயர் வரக் காரணம் யாது?

   நூற்பா 24,

5. நல்லாசிரியர் இலக்கணம் யாது?

   நூற்பா 26,

6. நல்லாசிரியர் எதற்கு ஒப்பிடப்படுகின்றனர்?

   நூற்பா-28 .

7. ஆசிரியர் ஆகாதோர் இலக்கணம் யாது?

   நூற்பா -31

8. மாணவன் ஆவதற்குரிய தகுதிகள் உடையவர் யார் ?

   நூற்பா-37

9. மாணவர்களாக தகுதியற்றவர்கள் யாவர்?

   நூற்பா 39

10. சிறப்பு பாயிரத்தின் இயல்புகள் யாவை?

    நூற்பா 47

11. ஆசிரியரிடம் பழகும் முறைகள் யாவை?

நூற்பா 46

12. எழுத்துகள் பிறக்கும் இடம் பற்றி குறிப்பிடுக?

நூற்பா-75

13. குற்றியலுகரம் என்றால் என்ன?

நூற்பா -94

14. குற்றியலிகரம் பற்றி விவரி?

நூற்பா 93

15. மகர குறுக்கம் பற்றி விவரி.

நூற்பா-96,

16. போலியின் வகைகள் பற்றி விளக்குக?

நூற்பா-122-124

17. உயிர்  எழுத்துக்களின் பிறப்பு குறித்து எழுதுக

நூற்பா-76-78,

18. மெய் எழுத்துகளின்  பிறப்பினை விவரி.

நூற்பா-79-88

19. மாத்திரை குறித்து நன்னூரால் கூறுவன யாவை ?

நூற்பா-99-101

20.பதம் என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

நூற்பா-128

20. அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சிகளை விவரி.

நூற்பா 151-152

21. உயிரிற்றுப் புணர்ச்சியை விளக்கி வரைக?

நூற்பா-162

22. ஈகார ஈற்றுப் புணர்ச்சியை சான்றுடன் விவரி.

நூற்பா-177

23. எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி குறித்து விளக்குக.

நூற்பா-188

24. தொண்ணூறு, தொள்ளாயிரம் பெயர்களுக்கான புணர்ச்சி விதியினை விளக்கி வரைக .

நூற்பா- 194

25. லகர ளகர ஈற்றுப் புணர்ச்சியை சான்றுடன் விவரி.

நூற்பா-227 – 234

**கட்டுரை வடிவில் விடை தருக**

1. நூலைக் கற்கும் ஆசிரியனது வரலாற்றினை எடுத்துரைக்க?

   நூற்பா - 26-30

2. பிறப்புப் பற்றி நன்னுலார் கூறும் செய்தியினனைக் கூறுக ?

   நூற்பா-74-87

3. பகுபத உறுப்புக்கள் யாவை?அவற்றினை விளக்குக .

   நூற்பா -1 33 ,

4. எண்ணுப்பெயர்கள் புணரும் விதத்தினை சான்றுகளுடன் விவரிக்க.

   நூற்பா - 188 -195

5. ணகர னகர எவ்வாறு புணரும் என்பதை எடுத்துரைக்க.

   நூற்பா -209 -218,

6. சிறப்புப் பாயிரம் குறித்துகட்டுரை வரைக.

   நூற்பா -47-48

7. மொழிமுதல் எழுத்துகளை விளக்குக.

   நூற்பா- 102-106

8. எழுத்துப்போலி கட்டுரை வரைக.

   நூற்பா - 122-124

9. வடமொழியாக்கம் குறித்த கட்டுரைக்க.

   நூற்பா -147- 152

10. புணர்ச்சியின் இலக்கணத்தைக் கூறி பொது புணர்ச்சியை விளக்கி விவரி.

நூற்பா -151-154

11. அகர ஈற்று புணர்ச்சி எழுதுக?

    நூற்பா - 167-170,

12. னகர ஈற்றுப் புணர்ச்சியை வரைக .

    நூற்பா-212-218

13. மகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்கி வரைக.

    நூற்பா219-223

14. லகர ளகர ஈற்றுப் புணர்ச்சியைக் குறித்துக் கட்டுரை வரைக.

    நூற்பா-227-233

15. மொழி முதல் எழுத்துக்களை விளக்குக.

    நூற்பா-102 -106

16. மொழி இறுதி எழுத்துக்களை விளக்குக.

    நூற்பா-107 -117

17. குற்றியலுகர எண்ணுப் பெயர்ளுக்குரிய சிறப்பு விதிகளை விவரி?

    நூற்பா-188 -199

18. அகர ஈற்று சிறப்பு விதிகள் குறித்து கட்டுரைக்க.

    நூற்பா-167 – 170

19. எல்லாம் எல்லாரும் எல்லீரும் சொற்களின் புணர்ச்சி குறித்து எழுதுக.

    நூற்பா- 245-246

20. உருபியல் கூறும் சாரியை குறித்து ஒரு கட்டுரை எழுதுக .243 -249

    நூற்பா- 243 -249